கரிசல் இலக்கிய பிதாமகர்

கி. ராஜநாராயணனின் கடிதங்கள்

(செ.திவான் அவர்களுக்கு எழுதியவை)

கரிசல் இலக்கிய பிதாமகர்

கி.ராஜநாராயணனின் கடிதங்கள்

(செ.திவான் அவர்களுக்கு எழுதியவை)

அஃசரம் பதிப்பகம்

நூல் விளக்கம்

நூலின் தலைப்பு	:	கி.ராஜநாராயணனின் கடிதங்கள் (செ.திவான் அவர்களுக்கு எழுதியவை)
பொருள்	:	வரலாறு
நூலின் ஆசிரியர்	:	செ.திவான், (ஆசிரியரின் 103வது நூல்) திருநெல்வேலி–627002
மொழி	:	தமிழ்
பதிப்பு ஆண்டு	:	2017
உரிமை	:	ஆசிரியருக்கே
பக்கங்கள்	:	20
அச்சிட்டோர்	:	காசி கிராபிக்ஸ், பாளையங்கோட்டை
நூல் வடிவமைப்பு	:	அப்துல் நசீர், நெல்லை
அட்டை வடிவமைப்பு	:	ச.சையது மீரான், சென்னை
விலை	:	ரூ.20/–

அஃசரம் பதிப்பகம்

என்.ஏ.எஸ்.சிவகுமார்
2/286-14,முத்துசாமி நகர்
பொங்கலூர் அஞ்சல், பல்லடம் (தாலூகா)
திருப்பூர் மாவட்டம் – 641667
கைப்பேசி எண்: 9159659788

சமர்ப்பணம் ....

சங்கீத சாம்ராட்
சிம்மக்குரலோன்
சீர்காழி **கோவிந்தராஜனுக்கு**





எண்ண அலைகள்

திக்கெல்லாம் புகழும் திருநெல்வேலிச் சீமையில் மதுரை ரோட்டில் அமைந்துள்ள ஹோட்டல் பிரபுவில் மதிய உணவை உண்டுவிட்டு கவுண்டரில் பில் கொடுத்துக் கொண்டிருந்த மறுமலர்ச்சி திமுகழகப் பொதுச்செயலாளர் திருமிகு. வைகோ *(அப்போது தி.மு.க.வில் மாநில மாணவர் அணி இணைச் செயலாளர் திரு.வை.கோபால்சாமி)* எதிரில் ரோட்டில், கமுக்கட்டில் உரப்பை ஒன்றை வைத்து கம்பீரமாக நடந்து சென்றவரை அடியேனிடம் எதிரில் உள்ள நல்லதம்பி நடத்தி வந்த புத்தகக் கடையில் நிழலில் நிறுத்துங்கள். நான் வந்துவிடுகிறனே் என்றார்கள். அடியேனும் அவ்வாறே செய்தேன். அதன்பின் அங்கு திருமிகு.வைகோ வந்தார். இருவரும் உரையாடினார்கள். அப்போது என்னிடம் இது யார் தெரியுமா? பிரபல எழுத்தாளர் கி.ரா. என்றார்கள். நான் அகமகிழ்ந்து போனேன்.

அப்போது அய்யா கி.ரா. அவர்கள் தனது மகன் காவல்துறையில் பணிபுரிகிறார். அவருக்கு நிர்வாகத்தில் ஏதோ சிறு உதவி தேவைப்படுகிறது என்றார். அந்த விவரங்களை அடியேன் குறித்து வாங்கிக் கொண்டேன். இவ்வாறு நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு துவங்கிய நல்ல நட்பு அய்யா கி.ரா.வுக்கும் அடியேனுக்குமுள்ளது.

அரசியலில் தீவிரம் காட்டிய நான் 1994இல் இருந்து நூல்களை எழுதத் துவங்கினேன். *(அதற்கு முன் இதழ்களுக்கு கட்டுரைகள் பல எழுதியுள்ளேன்)* அவ்வப்போது அடியேனது நூல்களை மதிப்புற்குரிய கி.ரா. அவர்களுக்கு அனுப்பி வைப்பேன். அவர்களும் தாமதமின்றிப் பதில் கடிதங்களை அனுப்பி வைப்பார்கள். அதில் பல கடிதங்களை, எளியேனது கவனக்குறைவினால் தவறவிட்டு விட்டேன்.

எஞ்சியிருக்கும் கடிதங்களையாவது பதிப்பித்துவிட வேண்டுமென்ற ஆவலில் இதனைத் தொகுத்தேன். இதனை வெளியிடத் துணிந்த எனது கண்ணியத்திற்குரிய மாமா திரு.என்.ஏ.எஸ்.சிவகுமார் (பொங்கலூர் அட்சரம் பதிப்பக உரிமையாளருக்கும்) நல்லமுறையில் அச்சிட்டுத் தந்த காசி கிராபிக்ஸ் முருகன் அவர்களுக்கும், நூலை வடிமைத்து தந்த தம்பி அப்துல் நசீர் அவர்களுக்கும், எல்லாம் வல்ல இறைவனுக்கும், காலத்திற்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எளியேன் வாழ்வதற்காக எழுதவில்லை, எழுதுவதற்காகவே வாழ்கிறேன்

ரெகான் சுலைமான் இல்லம்,
106F, 4A திருவனந்தபுரம் சாலை,
பாளையங்்கோட்டை, நெல்லை–627002
0462-2572665.

செ.திவான்

கரிசல் இலக்கியப் பிதா மகர்
கி.ரா. வாழ்க்கைக் குறிப்புகள்

பிறப்பு : தூத்துக்குடி மாவட்டம், இடைசெவல்
1923, செப்டம்பர் 16

தந்தை : சிரி கிருஷ்ணராமானுஜம்

தாயார் : லட்சுமி அம்மாள், (தாய் தந்தையருக்கு ஐந்தாவது குழந்தை)

இயற்பெயர் : இராயங்கலசிரி கிருஷ்ணராஜா நாராயண பெருமாள் ராமானுஜம் நாயக்கர்

படிப்பு : எட்டாம் வகுப்பு

தேசபக்தச் செம்மல் வீரபாண்டிய கட்டப்பொம்மன் உலவிய பாஞ்சாலங்குறிச்சி கரிசல் பகுதிக்கு மேற்கே உள்ள இடைசெவல்

தொகுத்தளித்த நாட்டுப்புறக் கதைகள் :11
சிறு கதை தொகுதிகள் : 7

கி.ரா. சில குறிப்புகள்

1971 : தமிழ் வளர்ச்சி, ஆராய்ச்சித் துறையின் விருது.

1979 : குழந்தைகளுக்கான 'பிஞ்சுகள்' குறுநாவலுக்கு இலக்கிய சிந்தனை விருது.

1989, 90 : புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் நாட்டுப்புறக் கதைகள் ஆவணப்படுத்துதல் மற்றும் ஆய்வு மைய இயக்குனரானார்.

1990 : சாந்தோம் பன்னாட்டு கிறித்துவ சங்கத்தின் சிறந்த எழுத்தாளருக்கான விருது.

1991 : 'கோபல்லபுரத்து மக்கள்' நாவலுக்கு சாகித்திய அகாடமி விருது.

1998 - 2002 : சாகித்ய அகாடமியின் பொதுப் பேரவையின் (நேஷனல் கவுன்சில்). மற்றும் தமிழக ஆலோசனைக் குழுவில் உறுப்பினர்.

2000 : 'கதைச் சொல்லி' இலக்கிய இதழின் ஆசிரியர்.

2000 முதல் இன்று வரை 'கரிசல் அறக்கட்டளையினை' இயக்கி ஆண்டு தோறும் சிறந்த சிற்றிதழுக்கு ஐந்தாயிரம் ரூபாய் விருது வழங்குதல்.

கி.ரா. நூல்கள்

1. கதவு (கதைகள்) - 1965
2. தமிழநாட்டு நாடோடிக் கதைகள் - 1966
3. கிடை - குறுநாவல் - 1968
4. வேட்டி (கதை, கட்டுரை, கடிதம்) - 1975
5. கன்னிமை (கதைகள்) - 1976
6. கோபல்ல கிராமம் (நாவல்) - 1976
7. தமிழ்நாட்டு கிராமியக் கதைகள் - 1976
8. பிஞ்சுகள் சிறுவர் குறுநாவல் - 1979
9. அப்பா பிள்ளை அம்மா பிள்ளை (கதைகள்) - 1980
10. மாந்தருள் அன்னப்பறவை (ரசிகமணி பற்றியது) - 1981
11. வட்டார வழக்குச் சொல்லகராதி - 1982
12. கிடைகுறுநாவலும் பன்னிரண்டு சிறுகதைகளும் - 1983
13. தாத்தா சொன்ன கதைகள் - 1984
14. கரிசல் கதைகள் (தொகுப்பு) -1984
15. கொத்தைப் பருத்தி (கதைகள்) - 1985
16. அழகிரிசாமி கடிதங்கள் - 1987
17. கரிசல் காட்டுக் கடுதாசி - 1988
18. கி.ரா.கடிதங்கள் - 1989
19. கோபல்லபுரத்து மக்கள் - 1990
20. மக்கள் தமிழ் வாழ்க - 1991
21. நாட்டுப்புறக் கதைகள் - 1991
22. நாட்டுப்புறக் கதைகள் ஒரு பன்முகப் பார்வை (ஆய்வுக் கட்டுரைகள் தொகுப்பு) 1991
23. கி.ரா.கட்டுரைகள் (சிறிய அளவில்) - 1991
24. நாட்டுப்புறக் கதைகள் 2 - 1992
25. வயது வந்தவர்களுக்கு மட்டும் - 1992
26. புதுவை வட்டார நாட்டுப்புறக் கதைகள் - 1993
27. கி.ரா.பதில்கள் - 1994
28. நாட்டுப்புறப் பாலியல் கதைகள் - 1994

29. அந்தமான் நாயக்கர் (நாவல்) - 1995
30. பெண்மணம் (நாட்டுப்புறக் கதைகள்) - 1995
31. காதில் விழுந்த கதைகள் (தொகுப்பு) -1996
32. புத்தகக் காதலர் (கட்டுரைகள்) - 1998
33. கி.ரா.கடிதங்கள் 3 2003
34. பெருவிரல் குள்ளன் (சிறுவருக்கான படக்கதை) - 1998
35. கி.ரா.கதைகள் (அனைத்துக் கதைகள் அடங்கிய பெரிய தொகுதி) - 1998
36. கி.ரா.நாட்குறிப்பிலிருந்து -2003
37. கி.ரா.அணிந்துரைகள், முன்னுரைகள் - 2004
38. கு.அழகிரிசாமி கதைகள் (தொகுப்பு) -2002
39. கடிதங்கள் கடிதங்கள் (மு.துணைவேந்தர், கி.வே.சு.+ கி.ரா) 1998
40. கி.ரா.கட்டுரைகள் (பெரிய அளவில்) 2002
41. கோபல்ல கிராமம், கோபல்லபுரத்து மக்கள், அந்தமான் நாயக்கர் (மூன்றும் சேர்ந்தது) 2002
42. கி.ரா. பக்கங்கள் - 2005
43. மறைவாய்ச் சொன்ன கதைகள் - 2005
44. நாட்டுப்புறக் கதைக்களஞ்சியம் - 2007
45. தேர்ந்தெடுத்த கதைகள் - 2007
46. கி.ரா.பதிவுகள் - 2016
47. கி.ராஜநாராயணனின் லீலை - 2016
48. கி.ராஜநாராயணனின் ருசியான கதைகள் - 2016
49. கி.ராஜநாராயணனின் சங்கீத நினைவலைகள் -2016

கி.ரா. பற்றி நூல்கள்

1. ராஜநாராயணீயம் (விமர்சனக் கட்டுரைகள்) - 1985
2. வட்டார இலக்கியமும் கி.ரா.வும் - முனைவர். விஜயலட்சுமி ராஜாராம் - 1995
3. மறுவாசிப்பில் கி.ரா. முனைவர் பேராசிரியர் பஞ்சு - 1996
4. கி.ரா.வின் எழுத்துலகம் - ரமேஷ் - பிரேம் - 2000
5. கி.ரா.- 80 (கட்டுரைகள்) - 2002
6. கி.ரா.வின் படைப்பாளுமை (முனைவர் சி. மங்கையர்க்கரசி) - 2003
7. கி.ரா.புதினங்கள் ஆய்வு (முனைவர் ந.அங்கயற்கண்ணி) - 2002

கரிசல் இலக்கிய பிதாமகர் மதிப்பிற்குரிய கி.ரா.அய்யா அவர்கள் அடியேனுக்கு அனுப்பிய கடிதங்கள் இதோ;

சகோதரர் செ.திவான் அவர்களுக்கு நலம்.

தாங்கள் அன்புடன் அனுப்பிய கீழ்க்கண்ட புத்தகங்கள் கிடைத்தன. மிக்க நன்றியுடன்

கி.ராஜநாராயணன்
புதுவை. 7.1.2002

1. வரலாற்றுன் வெளிச்சத்தில் ஔரங்கஜேப்,
2. ஆரியப்பாதையில் பசுவதை
3. வ.உ.சி.யின் வள்ளியம்மை சரித்திரம்
4. பெரியபுராணத்தில் வாழ்க்கை நெறி
5. வ.உ.சி.யின் வி.ஒ.சி. கண்ட பாரதி
6. வ.உ.சி.யும் தொல்காப்பியமும்
7. கட்டபொம்மனும் கலெக்டர் ஜாக்சனும்
8. நபிகள் நாயகம் மாண்மிய மஞ்சரி
9. விடுதலையின் நிறம் பச்சை
10. அண்ணாவின் மறுபக்கம்
11. மாற்றார் மதித்திடும் மாநபி (ஸல்)
12. வ.உ.சி.யும் திருக்குறளும்

தேனீயைப்போல் சதா சுறுசுறுப்பான உங்கள் பணி வியக்கத்தக்கது. போற்றி வாழ்த்துகிறேன்.

சலாம்

தாங்கள் 3.11.02 கடிதக்குறிப்போடு இலக்கியப் புரட்சியாளர் வ.உ.சி., ஆலிப்புலவர் ஆகிய இரு (+1 = 3) நூல்களும் கிடைத்தன.

"கதை சொல்லி" அச்சுக்கு புறப்பட்டுவிட்ட நிலையில் வ.உ.சி. நூலுக்கு மட்டும் ஒரு விளம்பரம்போல வெளிவர ஏற்பாடு செய்யும்படி தொலைபேசியில் சொல்லத்தான் முடிந்தது.

உங்கள் நூல் உழைப்புகள் வித்தியாசமானவை, அவசியமானவை, பாராட்டத்தக்கவை.

ரமலான் வாழ்த்துக்களுடன்

கி.ரா.
7.11.02
புதுவை–08

புதுவை –08

14.3.2003

சகோதரருக்கு நலம்

வ.உ.சி.யின் உயில் பிரசுரம் கிடைத்தது.

கிடைத்ததற்கு அரிய "தஸ்தாவேஜு" இது. இந்த உயிலை மற்ற இதழ்கள் வெளியிடாதிருந்தால் "கதை சொல்லி"யில் போடலாம் என்றிருந்தேன் தங்கள் பெயர் சொல்லி.

வ.உ.சி. பற்றி நீங்கள் இப்படிக் கொண்டு வந்த எழுத்துக்களை எல்லாம் திரட்டி ஒரே பெரிய புத்தகமாக கொண்டு வந்தால் ஆய்வு உட்பட அனைத்து விசயங்களுக்கும் ரொம்ப பயன்பாடாக அமையும். முக்கியமாக தமிழ்நாடு காங்கிரஸ் டிரஸ்டி (சத்திய மூர்த்தி பவன்) இவர்கள் செய்யலாம். பணம் அவர்களிடம் தான் இருக்கிறது.

வ.உ.சி.யைப் பற்றி நீங்கள் கொண்டு வந்த நூல்களுக்காகவே உங்களுக்கு ஒரு பெரிய அளவில் பரிசு தரலாம். என்னிடம் பணம் இல்லையே.

உங்களுக்கு எனது பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்

கி.ராஜநாராயணன்

சகோதரர் செ.திவான் அவர்களுக்கு நலம்

இப்போது தாங்கள் அனுப்பிய “மருதநாயகம்“ கிடைத்தது. நன்றி.

முன்னதாக அனுப்பிய “தியாக நெருப்பில் வைகோ” வந்து சேர்ந்தது. பல பகுதிகள் அதில் படித்தேன். வெகு சிறப்பு. நாங்கள் செய்யவேண்டியதை நீங்கள் செய்து கொண்டிருக்கிறீர்கள்! எப்படி உங்களைப் பாராட்ட.

அவரைப்போய் என்னால் பார்க்க முடியலை. புழுக்கத்தில் அவர் துன்பப்படுகிறார் என்று கேள்விப்படும்போதெல்லாம் நாங்கள் - மனைவியும் நானும் - துன்புறுவோம். செக்கை இழுத்த வ.உ.சி.யை நினைத்துக் கொள்வோம்.

வ.உ.சி.யின் உயிலை கதைசொல்லியில் வெளியிட்டேன். கண்களைத் துடைத்துக்கொள்ளாமல் அதைப் படிக்கமுடியவில்லை.

எங்களைப் போல அல்லாமல் பேனாவை நீங்கள் சரியாகப் பயன்படுத்துகிறீர்கள்.

வாழ்த்துக்களுடன்

கி.ரா
21.10.2003
புதுவை -08

கி.ராஜநாராயணன்
0-4, அரசு வீடுகள், லாஸ்பேட்,
பாண்டிச்சேரி - 605008
பேச: 0413-2251506
27.03.2005

சகோதர. செ.திவான் அவர்களுக்கு சலாம்.

அன்புடன் அனுப்பிய “பசுவதை ஒரு வரலாற்றுப் பார்வை” கிடைத்தது. தங்கள் உடல் நலம் பற்றிக் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

இந்த உடம்பு சமாச்சாரமே இப்படித்தான். இதை வைத்துக்கொண்டு இதோடு வாழ்வது என்பதே ஒரு பாடுதான். புதுவைப்பித்தன் வேடிக்கையாகச் சொல்லுவார். "சம்சாரம் என்பவள் ஒரு வயசுக்குஅப்புறம் ஆறாவது விரல் போலத்தான்"; இந்த வாசகம் உடம்புக்கும் பொருந்தும்.

என்ன செய்ய; எப்படியும் இந்த உடம்போடு நாம் வாழ்ந்தே ஆக வேண்டியதிருக்கிறதே.

பார்த்து பார்த்து இதை ரெண்டு வேளை குளுப்பாட்டி; எண்ணெய் தேய்த்து மஸாஜ் செய்து, வாசனைத் திரவியங்கள் பூசி, தட்டி தடவிக் கொடுத்து, வேளா வேளைக்கு சோறுட்டி, உறக்காட்டி, இன்பங்கொடுத்து என்ன கொண்டாடினாலும் சமயத்தில் மக்கர் பண்ணிவிடுகிறதே. குழந்தையையாவது அதை வாங்கிக்கொடுத்து கதைகள் சொல்லி சமாதானப்படுத்திவிடலாம். இது குழந்தை அல்ல குட்டிப்பிசாசு.

இதே உடம்பு நமக்கு எவ்வளவு ஆனந்தங்களையும் இன்பங்களையும் தந்தது என்று நன்றியோடு நினைத்துப் பார்க்க வேண்டியதிருக்கிறது. ஆகவே உடம்பைப் போற்றி வாழ்வோம் என்று சொல்லிவிட்டு, உங்கள் புத்தகத்துக்கு வருவோம்.

கடும் உழைப்பை செலவிட்டு இந்தப் புத்தகத்தை உருவாக்கியிருக்கிறீர்கள். பிராமணர்கள் புலவு உண்டதும் மது குடித்ததும் உலகறிந்த செய்தி. அதை நிரூபிக்க இத்தனை ஆதாரங்களை விழுந்து விழுந்து திரட்டியிருக்க வேண்டாமே. இப்போது அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்பது முக்கியமே அல்ல; என்ன செய்கிறார்கள் என்பதுதாம் முக்கியம். அதைப் பின்பற்றினாலே போதும்! "நான் சொல்வதைச் செய்; செய்வதைச் செய்யாதே" என்பதுதான் அவர்களது எழுதப்படாத வேதம்.

ஆடி மாதம்தான் அவர்களது திருமண விழக்காலங்கள். மற்றவர்களை இம்மாதத்தில் செய்யவிடமாட்டார்கள்; கூடாது என்பார்கள். திருமண மண்டபங்கள், சத்திரங்கள் அம்மாதத்தில்தான் காத்தாடும். ஊர்திப் போக்குவரத்துக்கள் கூட்டமே இருக்காது. காய்கறிகளெல்லாம் கொள்ளை மலிவு. ஜவுளிகள் ஆடித்தள்ளுபடியில் கிடைக்கும். மதியம் பதினோறு

மணிக்கு முகூர்த்தம்; பன்னெண்டு மணிக்கு சாப்பாடு. மற்றவர்களுக்கு அவர்கள் முகூர்த்த நேரம் குறித்துக் கொடுப்பது மிக அதிகாலை நாலு மணிக்கு, காலை 5.30 இப்படி இப்படி!

தமிழ்நாட்டில் நடந்த முதல் விதவவிவாகமே அவர்களின் வீட்டில்தான். அவர்கள் வீட்டில் நடந்த ஜாதி விட்டு ஜாதி நடந்த கல்யாணம் உலகத்துக்கே சாட்சி. ராஜாஜி மகள் – காந்தி மகன் – என்று. அப்படிச் செய்த ராஜாஜியை குடும்பத்தோடு அவர்கள் ஜாதியில் (ஜாதிப்பிரஷ்டம்) தள்ளிவைத்தார்களா? இப்போதும் புலவும் மதுவும் சாப்பிடுகிற பிராமணர்களைப் பற்றி அவர்களுக்கே தெரியும். என்ன ஓய் இப்படி என்று நாம் கேட்டால் கலிமுத்திப் போச்சு என்று மட்டுந்தான் சொல்லுவார்கள்; உள்ளுக்குள் ஆதரவுதான். முட்டையும் புலவு சூப்பும் மருத்துவத்துக்கு என்று சொல்லி பகிரங்கமாகவே வாங்கி உணவாக சேர்த்துக் கொள்வதில் லஜ்ஜை இல்லை அவர்களுக்கு.

பி12 உயிர்ச்சத்து (வைட்டமின்) மாட்டு மாமிசத்தில் மட்டும் தான் இருக்கு என்பதை அவர்கள் அறியாதவர்களா? பி.டி.உஷா 5 தங்க மெடல்கள் ஒலிம்பிக்கில் வாங்கினார். நாடு திரும்பியதும் ஒரு அரசியல் கட்சியில் அவரை சேர்த்துக் கொண்டார்கள். (அதில் தப்பிதம் கிடையாது; அது அவர் விஷயம்) அந்தக் கட்சியில் மாட்டு மாமிசம் சாப்பிடக்கூடாது என்று இருக்கு. அதனால் அதை விட்டுவிட்டார். அடுத்த ஒலிம்பிக்கில் அவர் ஒரு பித்தளை மெடல்கூட வாங்க முடியலை. காரணம் என்ன அவர்கள் சொன்னதைக் கேட்டது தான்!

நான் பிராமணர்களுக்குச் சொல்ல விரும்புவதெல்லாம் இந்துக்களைப் பார்த்து மாட்டு மாமிசத்தை உண்ண வேண்டாம் என்று தாராளமாகச் சொல்லுங்கள். மற்ற மதத்தினரைப் பார்த்து இதைச் சொல்லாதீர்கள்; வற்புறுத்தாதீர்கள்; உங்கள் துருத்தியை நீங்கள் ஊதுங்கள் அவர்கள் துருத்தியை அவர்கள் ஊதட்டும் என்பதே.

உங்களிடம் எத்தனையோ நல்ல விசயங்கள் இருக்கின்றன. அதில் ஒன்று உங்களில் இறந்துபோன ஒருவரை எவ்வளவு சீக்கிரம் அப்புறப்படுத்தி எரியூட்ட முடியுமோ (தகனம்) அப்படிச் செய்வது. பாரதிக்கும் அப்படிச் செய்ததால்

அவருக்குப் பின்னால் பதினோரு பேர்கள் மட்டுமே வரமுடிந்தது. புதுச்சேரிக்கு சேதி தெரியப்படுத்தி இருந்தால் பாரதிதாசனோடு குறைந்தது இன்னொரு பதினோறு பேர்கள் வந்து 22 என்று கணக்காகி இருக்கும். எல்லாம் வித்தியாசந்தான் உங்களிடத்தில்!

கி.ரா.
புதுவை -08
27.3.2005

இக்கடிதத்தை தபாலில் சேர்ப்பதுக்கு முன்னால் பாரதிதாசனார் மகன் மன்னர்மன்னனோடு தொலைபேசியில் தொடர்புகொண்டு, பாரதியின் மரணம் பாரதிதாசன் வீட்டுக்குத் தெரியப்படுத்தவில்லை என்றும் பாரதியின் மரணம் பற்றி பாரதிதாசன் கவிதை எழுதினாரா என்றும் தெரியவில்லை என்றும் அவரிடம் கேட்டுத் தெரிந்துகொண்டேன்.

கி.ரா.
6.4.05

சகோதர செ.திவான் அவர்களுக்கு நலம்.

"வேலூர்ப் புரட்சியில் வீரமிகு முஸ்லிம்கள்" கிடைத்தது. ரொம்ப சந்தோசம்.

கட்டமைப்பு அச்சு எல்லாம் சிறப்பு. முக்கியமாக படிக்கும்படியான எழுத்துப் பருமன், சற்றே (வலதுபுரம்) இந்த எழுத்துத்தான் கண்ணுக்கு நல்லது என்று ரசிகமணி அவர்கள் சொல்லுவார்கள். நட்டுக்குத்தல் தலைப்புக்குச் சரி.

உங்களிடம் புத்தகங்களைப் பெற்றுக்கொண்டே இருக்கிறேன்; ரொம்பவும் கடன்பட்டுவிட்டேன் உங்களிடம்; நீங்கள் விதைப்பதெல்லாம் நல்ல அறுவடையாக பலன் கிடைக்கவே செய்யும். நலமுடன் வாழ நீண்ட ஆயுளுடன் என்றும் எனது ஆசிகள்.

பிரியங்களுடன் கி.ரா.
புதுவை - 8
22.8.2006

கி.ராஜநாராயணன்
புதுவை –08
9.9.08

சகோதர செ.திவான் அவர்களுக்கு நலம்.

தங்கள் கொடை நூல்களான வ.உ.சி.யின் சிவஞானபோதஉரை, வ.உ.சி.யின் அழகும் ஆரோக்கியமும், கழகத்தின் காவலன் கே.வி.கே.சாமி, அறிஞர் அண்ணாவின் அமுத மொழிகள் 100, சிந்தனைச்சிற்பி சி.பி.சிற்றரசு, சுயமரியாதைக்சூரர் ஏ.வி.பி.ஆசைத்தம்பி, ஆகியன கிடைக்கப்பெற்றேன்.

உங்களுக்குள்ளே ஒரு புத்தகம் தாயரிக்கும் ராட்சச இயந்திரம் இருக்கும்போல! திருஷ்டி சுற்றிப் போடலாம் என்றால் அதில் நம்பிக்கை இல்லையே!

புத்தகங்களையே மூச்சாய் இழுத்து புத்தகங்களாய் மூச்சு விடுகிறீர்கள். எரிமலை தீப்பிழம்பாகக் கக்கும்; இந்த திவான் மலை புத்தகங்களை கக்குகிறது.

வாழ்க உங்கள் உழைப்பு.
பாராட்டுகளுடன்

என்றும்
கி.ரா.

கி.ராஜநாராயணன்
புதுவை–8
13.12.2010

அன்பார்ந்த செ.திவான் அவர்களுக்கு எப்பவும் நலமே விளைக. இப்பவும் தங்கள் அன்புடன் அனுப்பிய தேவநேயப்பாவணரின் 'துவாரகை மன்னன்' கிடைக்கப் பெற்றேன்.

வித்தியாசமான, தேவையான நூல் இது. தமிழுக்கு தங்கள் தொடர்கொடை வந்துகொண்டே இருக்கிறது. வாழ்க.

பக்கம் 5ல், சிறுவர் பாடல் திரட்டு என்பதில் எனக்கு ஒரு சந்தேகம். சிறந்த எழுத்துக்களைத் தவிர்க்கும் பாவாணர்,

"அரசர் ஐந்தாம் ஜார்ஜூக்கு இராஜ வாழ்த்துப்பாடல்" என்கிற வரியில், ஜா, ஜா, ஜ எழுத்துக்கள் எப்படி வந்தன!

உலகாளும் மாமன்னர் என்பதால் தமிழ் வளைந்து கொடுத்ததா அல்லது எழுத்துப் பிழையா?

மெனக்கிட்டு இதை குறிப்பிட்டுக் கேட்கமாட்டேன்; தேவநேயப்பாவாணர் விசயம் என்பதால் கேட்டேன். மற்றப்படி பெரிதாக நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டாம்.

மிக்க அன்புடன்
கி.ரா.
புதுவை -08
13.12.2010

புதுவை -08
11.11.11

சகோதர திவான் அவர்களுக்கு நலம்,

"பரிசு பெறாத பாரதி பாடல்" நூலினுள் எனக்கெழுதிய குறிப்பைப் படித்ததும் இந்தக் கடிதம் எழுத உட்கார்ந்துவிட்டேன். தொடர் மழைபோல் நீங்கள் அனுப்பிக்கொண்டிருக்கும் அத்தனை நூல்களும் தவறாமல் எனக்குக் கிடைத்துக் கொண்டே இருக்கின்றன. அட்டியில்லாமல். நன்றிகள்.

"அல்ஹிந்து" போன்ற இதழ்களும் தங்கள் ஆதரவால் எனக்கு வந்துகொண்டு இருக்கின்றன. இதற்காக அவர்களுக்கும் உங்களுக்கு சேர்த்தே நன்றி தெரிவிக்கிறேன். "அல்ஹிந்த்" தின் வடிவம் அமைப்பு, உள்ளடக்கம், தரமான தாள், எழுத்து நேர்த்தி எலலாம் பாராட்டும்படி அமைந்திருக்கின்றன. அதில் எமக்குத் தெரியாத எவ்வளவோ விசயங்கள் வருகின்றன. எனது பாராட்டுதலை அவர்களுக்குச் சொல்லுங்கள். பார்க்க இப்படி ஒரு லட்சண சுத்தமா "பேப்பர்" தமிழில் இல்லை!

பரிசு பெற்ற அந்தப் பாடல்கள் யாருடையது, யார் அவர்கள், என்ற நீண்ட நாளையக் கேள்விக்கு உங்கள் மூலமாகப்

பலவிசயங்கள் இந்நூல் மூலம் தெளிவு கிடைக்கிறது. யாரும் தொடாத கேள்விக்குரிய பல விடயங்கள் இப்படி உங்கள் மூலம் நூல்களாகவே பதில்கள் கிடைப்பது தமிழர்கள் செய்த பாக்கியம்.

இப்படியான செயல்கள் மூலமாகவே உங்களுடைய ஆரோக்கியமும் ஆயுளும் நீடித்துக் கொண்டே வரும் என்பது அனுபவ உண்மை. தமிழ் இலக்கிய உலகில் நீங்கள் ஒரு தனி நட்சத்திரம்.

என்றும் பாராட்டுக்களுடன்
கி.ரா.

கி.ராஜநாராயணன்
புதுவை – 08

17.01.2012

சகோதரர் திரு.செ.திவான் அவர்களுக்கு சலாம்.

உங்கள் பேரில் எனக்கு ரொம்ப ரொம்பப் பொறாமையாக இருக்கிறது. அநிநாயத்துக்கு இப்படியா புத்தகங்களைக் கல்மழை பெய்யும் வேகத்தில் கொண்டு வருவார்கள்! உங்கள் வீட்டு மாமியிடம் சொல்லி திருஷ்டி சுத்திப் போடச் சொல்லுங்கள். *(திருஷ்டி கழிப்பதில் உங்களுக்கும் எனக்கும் நம்பிக்கையில்லாமல் இருக்கலாம்; அதில் ஒரு சிறுபிள்ளை ஆனந்தம் இருக்கவே செய்கிறது.)*

உங்களுக்குகே என்றுள்ள சுரங்கத்தில் தோண்டத் தோண்ட வந்து கொண்டேயிருப்பது; பாளையங்கோட்டையில் அப்படி ஒரு சுரங்க்ம் வாய்த்திருக்கிறது! யோகவான் நீங்கள். எதைச்சொல்லி, எப்படிச் சொல்லி உங்களை வாழ்த்த என்று தெரியவில்லை. சமுத்திரம் இருக்கும்வரை மீன்களும் முத்துக்களும் பவளங்களும் இப்படிக் கிடைத்துக் கொண்டே இருக்கும்.

03.02.2012

ரிச்சர்ட் அட்டன் பாரோ தயாரித்த "காந்தி" படம் நானும் பார்த்திருக்கிறேன். அதில் சுபாஷ் சந்திரபோஸைக்

காட்டவில்லை என்பதை இப்போது நீங்கள் சொல்லித்தான் ஞாபகத்துக்கு வருகிறது.

இந்தப் படத்தை இலங்கையில் வைத்துப் பார்த்தவர்கள், அதிலிருந்து பல காட்சிகள் இந்தியாவில் பார்க்கும்போது இல்லை என்று சொன்னதாக கேள்விப்பட்டிருக்கிறேன். முக்கியமாக நேருவும் திருமதி.மவுண்ட்பேட்டனும் பழகும் காட்சிகள். இப்படி பல காட்சிகளை சென்சார் பண்ணித்தான் இந்தியாவுக்குள் அனுமதித்ததாகவும் சொன்னார்கள்.

சுபாஷ்போஸ் பேரில் இங்கே மக்களுக்கு எப்படிக் கூடிய அபிமானம் உண்டோ அவ்வளவுக்கு துவேஷமும் உண்டு. காட்டாக, என்னுடைய "கோபல்லபுரத்து மக்கள்" நாவல் ஆனந்தவிகடன் இதழில் தொடராக வந்ததை நீங்கள் அறிந்திருக்கலாம். அந்நாவலில் சுபாஷ்போஸ் சம்பந்தப்பட்ட காட்சிகள் எதுவும் இடம் பெறவில்லை. காரணம், "போஸ் சம்பந்தப்பட்ட விசயங்கள் அனைத்தும் நமது வாசகர்களுக்குத் தெரிந்ததுதானே. அதனால் அவைகளை மட்டும் நீக்கிவிடலாம் என்று கருதுகிறேன்" என்று சொல்லி எனது சம்மதத்தையும் பெற்றுக்கொண்டார்கள். "சரி; புத்தகமாக வரும்போது போஸ் சம்மந்தப்பட்ட விசயங்களை சேர்த்துக்கொள்ளலாம் என்று நினைத்து அப்படியே செய்தேன். புத்தகத்தின் தொடக்கத்தின் குறிப்புரையில்," கோபல்லபுரத்து மக்கள் கதையின் ஒருவகைச்சுருக்கம் ஆனந்தவிகடனில் தொடராக வந்தது. அது இப்போது நான் எழுதியபடியே புத்தகமாயிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறேன்.

ஏன் இவர்களுக்கு சுபாஷ் சந்திர போஸைப் பிடிக்கவில்லை என்பது தனிக்கதை. அதைப்பேச இப்போது இங்கே நேரமில்லை.

05.02.2012

ஜனவரி 17ஆம் தேதி எழுத ஆரம்பித்த இக்கடிதம் தொடர்ந்து எழுதிமுடிக்க வந்த தடங்கல்கள் சொல்லிமாளாது. முக்கியமான இரண்டு காரணங்கள். பிரசித்திபெற்ற "தானே"

என்கிற புயல்க்காற்று அடுத்து எனது மனைவிக்கு ஏற்பட்ட திடீர் சுகக்கேடு. இப்போதுதான் கொஞ்சம் தேவலை. என்றாலும், எதுவும் படிக்கவோ எழுதவோ மனசு கூடிவரவில்லை. உடனடியாக இந்த மாடிப்படிகள் உள்ள வீடு ஆகாது; தரையிலே இருக்கும்படியான ஒரு வீடு பார்த்துக் குடியேற வேண்டும் என்று சொல்லிவிட்டார்கள். அகழியிலேயே கிடந்த முதலையை வேறொரு இடத்துக்கு மாற்றும் கதைதான். அந்த வீட்டு மனுசனாக ஆகவே பலநாட்களாகும். அது நான் குடிபுகும் ஏழாவது வீடு ஆகும்!

காலம் எம்மை இப்படித் துரத்துகிறது.

என்னுடைய ஞாபகசக்தி சரியாக இருந்தால்........

நீங்கள் இந்த வீட்டுக்கு வந்திருக்கிறீர்கள். உங்கள் கூட தோப்பிலும் (தோப்பில் முகம்மது மீரான்) வந்த ஞாபகம். நாங்கள் இங்கே குடிபுகுவதற்கு முன்பே இந்த வீட்டின் ஓர் அறையில் நீங்கள் எனது புத்தகக் குவியலுக்கு மத்தியில் ஓர் இரவு கழித்திருக்கிறீர்கள்.

இப்போது அந்த அளவுக்குப் புத்தகங்கள் இல்லை. எல்லாத்தையும் கழித்துக்கட்டிவிட்டேன். இந்தப் புத்தகங்கள் நானாகத் தேடிக்கொண்டதில்லை. அவையாக வந்து என்னோடு ஒட்டிக்கொண்டவை. பெரிய்ய 'தலைச்சிறை' இவை. இந்தப் பேனாவையும் தூக்கி வீசிவிட்டால் நிம்மதி.

யாவற்றிலிருந்தும் விடுபட விரும்புகிறேன். "இந்திய சுதந்திரப் போரில் வக்கம் அப்துல் காதர்" உங்கள் உழைப்பின் கனி.

போற்றுகிறேன் உங்களை

மிலாடி நபி வாழ்த்துக்கள்.

என்றும் கி.ரா.
புதுவை –08
5.2.2012

மதிப்பிற்குரிய   கி.ரா., புதுவை-8.
                                      27-4-2016.

செ. திவான் அவர்களுக்கு வணக்கம். மலைமலையாகப் புத்தகங்கள் — கெட்டி அட்டைகளுடன் — வந்து கொண்டே இருப்பது அதிசயத்திலும் அதிசயம்.

நினைவில் நிற்கும்படி இசைமேதை நாகூர் ஹனீபா அவர்களுக்கு ஒரு கோவிலே கட்டியிருக்கிறீர்கள்.

பிசிறில்லாத உச்சஸ்தாயில் அவர் பாடியவை நினைத்தாலே இப்போதும் மனதில் ஒலிக்கும்.

நான் சின்னஞ்சிறிய வயதில், ஆர்மோனியம் காதர்பாட்சா அவர்களுடைய பாடலை கிராமஃபோன் ரிக்கார்டில் பலமுறைகேட்டிருக்கிறேன். தூக்கு மேடையில் அவரைப் பாடச்சொல்லிக் கேட்டதால் தண்டனையே ரத்தாகிவிட்டதாகச் சொல்லுவார்கள். இசை செய்யும் மாயை அப்பேர்ப்பட்டதுதான்.

பாடுவது உசத்தி; சரியாகப் பாடுவது அதனிலும் உசத்தி; பாடலை இயற்றிப் பாடுவது மிகமிக உசத்தி அல்லவா.

நாகூரின் புகழ் ஓங்குக.

என்றும்
கி.ரா

கி.ரா.

புதுவை -8

"சொல்லி முடிக்கப்படாத சுயசரிதை"

சந்தோசமாகப் படிக்க தொடங்கி, ஓ..... வாழ்க்கை என்பது இவ்வளவுக்குத் துன்பங்கள் கொண்டதா அய்யோ என்று மலைத்துப் போனேன்.

வேண்டாமே இந்த வாழ்க்கை என்றுதான் தோன்றுகிறது. சந்தோசத்துக்காக இல்லை. இந்த வாழ்க்கை இந்த உலகம் என்றே தோன்றிவிட்டது. உங்கள் வாப்பாவின் பிள்ளை வாழ்க்கை வெளிநாட்டு வாசம். அதனால்தான் மேல்க்கொண்டு எழுதாமல் விட்டுவிட்டாரோ?

பன்னிரண்டு பக்கங்களைக் கொண்ட துயரப்பாடல் இந்நூல்.

40 பக்கங்களைக் கொண்ட 20 கேள்வி பதில்கள் கொண்ட நூல். பதில்கள் அனைவருமே தெரிந்துகொள்ள வேண்டியவை. பயனுடையவை, நீங்கள் யார் என்று சொல்லுகிறது,

பாராட்டுக்களுடன்

கி.ரா.
12.12.2016

'வரலாற்றியல் அறிஞர் '
செ.திவான்

'நேற்று-இன்று-நாளை' என்னும் வாழ்க்கைப் பயணம், வரலாறு இன்றி முழுமை பெறாது. அந்த வரலாற்றை ஆதாரத்துடனும் அர்ப்பணிப்புடனும் தருவதில் வல்லவர் 'வரலாற்றியல் அறிஞர்' செ.திவான். திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை அருகில் விசுவநாதபுரத்தில் 1954-ஆம் ஆண்டு பிறந்த இவர் 63 வயதைக் கடந்தபோதிலும் இன்றளவிலும் கல்வி பயின்று கொண்டிருக்கும் மாணவராகவே திகழ்கிறார்.

எழுதுவதற்காகவே வாழும் இவர் தனது வரலாற்று நூல்களுக்கான ஆதாரங்களைத் திரட்டுவதற்காக பெரும்பொருள் செலவு செய்தவராவார். தாமே எழுத்தாளராகவும் பதிப்பாளராகவும் விளங்குவது இவரது சிறப்பு.

இதுவரை வார-மாத இதழ்களிலும் தினசரிகளிலும் 1000-க்கும் மேற்பட்ட கட்டுரைகள் எழுதியுள்ளார். 100-க்கும் மேற்பட்ட நூல்களும் எழுதியுள்ளார். வ.உ.சிதம்பரனார் பற்றி மட்டும் 20 நூல்கள் எழுதியுள்ளார்.

இவரது முதல் நூல் 'தக்கலை ஞானமாமேதை தென்காசி பீர்முகம்மது அப்பாவின் சரிதையும் பாடல்களும்' என்பதாகும்.

18 வயதில் தொடங்கிய இவரது எழுத்துப்பணி இன்னும் அடுத்த வயதைக்கூட எட்டாமல் அதே இளமையுடன் இருப்பது மகிழ்ச்சியே. இவரது வேகம்,விவேகம்,ஈடுபாடு ஆச்சரியப்படத்தக்கதாகும்.

இலக்கிய உலகம் பெற்ற வரம், 'வரலாற்றியல் அறிஞர் ' செ.திவான் என்று கூறுவது மிகையன்று...!

என்.ஏ.எஸ்.சிவகுமார்
(பதிப்பாளர்)

அஃசரம் பதிப்பகம்